பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : மாசி 15 (27—2—68) செவ்வாய் ★ வெளியூர் : மாசி 16 (28—2—68) புதன் [இதழ் : 213

மொழிச்சுமை: காங்கிரசுக் கட்சியின் புதிய கண்டுபிடிப்பு!

மும்மொழித் திட்டம் மேலும் விரிவாகிறது!

பாதகங்களைக் குறைப்பதற்குப் பதில் பங்கு போடும் போக்கு!

('நம் நாடு' செய்தி நோக்கு)

மும்மொழித் திட்டத்தினை மத்திய அரசின் நிர்வாக அலுவல்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம், ஆட்சிமொழித் தீர்மானத்தினுல் ஏற்பட்டுள்ள மொழிச் சுமையினை எல்லாப் பகுதியினருக்கும் பரவலாக்கி ஈடுசெய்யும் தீர்மானம் ஒன்றினை, புதுடில்லியில் கூடிய அனைத்திந்திய காங்கிரசுக் கட்சியின் செயற்குழு உருவாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

இதன்படி, இந்தி பேசும் மத்திய அரசு ஊழியர்கள், ஆங்கிலம் மற்றும் ஏதாவது வட்டார மொழி ஒன்றினை—சிறப்பாகத் தென்னக மொழி ஒன்றினையும்—

இந்தி பேசாத பகுதியிலிருந்து மத்திய அரசில் வேலைவாய்ப்பினைத் தேடுபவர்கள் தாய்மொழி—ஆங்கிலம்—இந்தி ஆகிய மூன்று மொழிகளையும்

படிக்க வேண்டுமென வழிவகை செய்யக் கோரி காங்கிரசுச் செயற்குழு கருத்தறிவித்திருக்கிறது.

சொந்த அலுவல்கள் காரணமாக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளாத தலைமையமைச்சர், செயற்குழுவின் முடிவினைத் தெரிந்து கொண்ட பின்னர், மாநில முதலமைச்சர்களுடனும், முக்கிய அரசியல்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கவிழ்ப்பு: ஒரு குழப்பம்!

★ "தமிழக அரசைக் கவிழ்க்க காங்கிரசு ஆளும் மத்திய அரசு சூழ்ச்சி செய்து வருவதாகத் தெரிகிறது" என அண்ணு—இராஜாஜி ஆகியோர் வெளியிட்ட அறிக்கையை, 'சாதாரண அரசியல் பிரச்சாரம்' என்று தமிழ்நாடு காங்கிரசு வட்டாரம் கருத்துத் தெரிவித்திருக்கிறது."

★ "தமிழகம்—கேரளம் ஆகிய மாநிலங்கள் உட்பட காங்கிரசல்லாத ஆட்சிகளை அப்புறப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினை, காங்கிரசு செயற்குழு தயாரிப்பதற்கு இருக்கிறது. ஐதராபாத் காங்கிரசு மாநாட்டுத் தீர்மானத்தின் தொடராக அடுத்து நிறைவேற்றப்படவிருக்கும் திட்டம், ஓர் நீண்டகால நோக்கம் கொண்டதாகவும், தேவைப்படும்போது அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும் இருக்கும்."

—'மெயில்' (26—2—68) இதழில் வெளிவந்துள்ள புதுடில்லிச் சிறப்புச் செய்தி.

அண்ணு—இராஜாஜி அறிக்கையை, 'அரசியல் பிரச்சாரம்' எனக் கூறும் தமிழ்நாடு காங்கிரசு வட்டாரம், இதற்கு என்ன பதில் சொல்லுகிறது ?"

இரயில்வேத்துறையின் விசித்திரப் போக்கு !

கழக உறுப்பினர் எடுத்துக்காட்டு

"'உல்லாச சுற்றுப்பயணம் அதிகரிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொல்லப்படும் அதே நேரத்தில், இப்போதுள்ள இரயில் பாதைகள் சிலவற்றை எடுத்துவிடவும் முயற்சிக்கப்படுகிறது ; இரயில்வே இலாகாவின் இச்செய்கை, 'படிப்பது இராமாயணம் : இடிப்பது பெருமாள் கோயில்' என்ற தமிழ்ப் பழமொழியை ஒத்திருக்கிறது"

என்று மக்களவையில், செ. கொ. விசுவநாதன், சிரிப்பொலிக்கிடை சுட்டிக்காட்டினர்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

ஏப்ரல் 4-ம் நாள் துவங்கும்

சென்னை, பிப். 26—

இந்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு ஏப்ரல் 4-ம் நாள் துவங்கும். சுமார் ஆயிரம் இடங்களில், ஏறத்தாழ 2,10,000 மாணவர்கள் தேர்வு எழுதுவர்.

சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் 30,000 மாணவர்கள் கூடுதலாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுகின்றனர்.

காலதாமதமாக இந்தத் தேர்வு நடைபெற்றாலும், விடைத் தாள்கள் விரைவாக மதிப்பிடப்பட்டு, முடிவுகள் வழக்கம்போல் ஜூன் 10-ம் நாளுக்குள் வெளியிடப்பட்டு விடும்.

அமைச்சர் விளக்கம்

"1968-ம் ஆண்டுக்கான பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) திட்டமிட்டபடி ஏப். 4 முதல் 10-ம் நாள் முடிய நடைபெறும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

"தேர்வு ஏப். 4-ம் நாள் தொடங்கி நடக்கும்; ஏப். 6, 7, 8 ஆகிய நாட்கள் விடுமுறையாகையால் மீண்டும் 9-ம் நாள் தொடங்கும் ; ஏப். 8-ம் நாள், மேலவைத் தேர்தலை முன்னிட்டு விடுமுறையாகும்"

என்றும் அமைச்சர் விளக்கமளித்தார்.

கவிழ்ப்பாளர்கள் கவனிக்க :

காங்கிரசின் போக்குக்குக் காந்தீயவாதிகள் கண்டனம்

"காழ்ப்பு உணர்ச்சியில் உந்தப்பட்டுச் சில காங்கிரசுக்காரர்கள், தீயசக்திகளுடன் சேர்ந்துகொண்டு தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்துவிடப் பாடுபடுகின்றனர்.

"நேர்மையுள்ளம் கொண்ட பொதுமக்கள், சனநாயகத்தைப் புதைகுழிக்கு அனுப்பத் துடிக்கும் அவர்களுடைய முயற்சியை அம்பலப்படுத்தி ஒதுக்கித் தள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்"

என, தமிழ்நாடு காந்தீயவாதிகள் சங்கம், சென்ற ஞாயிறன்று சென்னையில் கூடித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

திருவாளர் சந்தேகம்

"இந்தி ஒரே ஆட்சி மொழியாவது, இந்தி மொழிக்காரர்களுக்கும் 'சுமை'தான் என்ற புதுமையை மக்களவையில் இந்திரா காந்தி கூறினுரல்லவா ? அதற்கு, காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்திலேயே எதிர்ப்பும், பதிலும் கிடைத்திருக்கிறது !

"ஆட்சியில் அமரப்போகும் இந்தி, புதிய வகையைச் சேர்ந்தது ; எனவே அது, இந்திக்காரர்களுக்கும் புதிதானது தான்" என்ற புதிரைப் போடப்போய், அது, இத்தனை நாட்களாகக் கூறிவந்த காரண காரியத்தையே தகர்த்துத் தூளாக்குவதாக இருப்பதை, இந்திரா உணரவில்லை !

"அமுலுக்கு வரப்போகும் இந்தி, முற்றிலும் புதிய ஒன்று" என்று, இந்திரா காந்தி கூறுவது உண்மையானுல், 'பெரும்பாலோர் பேசுவது இந்தி ; எனவே அது தான் ஆட்சி மொழியாக—பொது மொழியாக வரவேண்டும்' என்று வாதிப்பது பொருந்தாதே !

"இந்திக்காரர்களுக்குப் புதிதாக இருக்கும் இந்தி, எப்படிப் பெரும்பாலோர் பேசும் மொழியாகும்? பின்னர், எப்படித் தேசியமொழியாகும்?"—இப்படியெல்லாம் இந்திராவைக் கேட்டிருக்கின்றனர், கட்சியிலுள்ள மற்றவர்கள் !

மார்ச் 6: தமிழகம் மறுமலர்ச்சி கண்ட நாள்!

அண்ணு ஆட்சியின் மாட்சியினை நாடெங்கும் எடுத்துக்கூறுவோம்-- மக்கள் ஆதரவைத் திரட்டுவோம்!

மாவட்ட - வட்ட - கிளைக் கழகங்கட்குத் தலைமைக் கழகம் வேண்டுகோள்

1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் நாள் நம் தமிழகத்தின் அரசியல் வானில் ஒளி வீசி, ஏழை--நடுத்தர மக்களின் அன்றாட வாழ்வில் மறுமலர்ச்சி காணப்பெற்றது. அதன் அடிப்படையில் நாட்டின் பல்வேறு துறைகளில் நல்வாழ்வும் வளர்ச்சியும் பெற்றுவருவதை நாடே பாராட்டுகிறது--போற்றுகிறது--வாழ்த்துகிறது !

எனவே, கழக அரசு கடந்த ஓராண்டுக் காலத்தில் ஆற்றியுள்ள அரிய சாதனைகளை, மார்ச் 6-ஆம் நாளன்று நாடெங்கிலுமுள்ள மாவட்ட- வட்ட—கிளைக் கழகங்களும், சார்பு மன்றங்களும், துணை அமைப்புகளும் பொதுக்கூட்டங்களின் வாயிலாக விளக்கிக்கூறி, மேலும் மக்களின் ஆதரவைத் திரட்டித்தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்'
சென்னை-13
27—2—68

என். வி. நடராசன்,
அமைப்புச்செயலாளர், தலைமைக்கழகம் (தி மு க)

கல்வி நிலையங்கள் மீண்டும் மூடப்படுகின்றன

மதுரை, கோவை மாவட்டங்களில் நடவடிக்கை

மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாக, மதுரை மாவட்டத்திலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களையும் நான்கு நாட்களுக்கு மூடிவைக்க மாவட்ட ஆட்சியர் ஆணை பிறப்பித்துள்ளார்.

அதேபோல், கோவை மாவட்டத்திலும் எல்லாக் கல்வி நிலையங்களையும், மறு ஆணை வரும்வரை மூடி வைக்குமாறு கோவை மாவட்ட ஆட்சியர் ஆணை பிறப்பித்துள்ளார்.

திட்டக் குழுவுடன் கருத்து வேற்றுமை

புதுடில்லி, பிப். 27—

அடுத்த ஆண்டுக்கான உணவு உற்பத்தியின் திட்ட இலக்குக் குறித்து மத்திய உணவு அமைச்சகத்திற்கும்—திட்டக் குழுவுக்கும் கருத்துவேற்றுமை இருப்பதாகத் தெரியவருகிறது.

"1968—69-ம் ஆண்டு உணவு உணவு உற்பத்தியின் திட்ட இலக்கு 109 மில்லியன் டன்னுக இருக்கும்" என்று மத்திய உணவு அமைச்சகம் எதிர்நோக்கியிருக்கிறது.

"இந்த இலக்கு 102 மில்லியன் டன் அளவில்தான் இருக்கும்" என்று திட்டக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

காதில் விழுந்தது!

"முதலமைச்சரும் — தலைவரும் சந்தித்திருக்கிறார்களே, படித்தாயா?''

"இரண்டு நாட்களாகச் செய்தியே அதுதானே! என்னவோ, நமது பத்திரிகையில்தான் அதைச் சரிவர போடவில்லை?''

"நமது பத்திரிகையில் மட்டும் என்ன? நம்மவர்கள் மத்தியில் கூட ஓர் 'அமைதி'தான் தென்படுகிறதே தவிர, இருவரும் சந்தித்துப் பேசியது பற்றி மற்றவர்களிடமிருந்து 'பேச்சு மூச்சு' காணோமே!''

"நீயும் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறாய்; பதவி போயும், 'தலைவர்' என்ற வார்த்தையை மட்டும்தான் நம்மவர்கள் பயன்படுத்துகிறார்களே தவிர, அதற்குரிய மதிப்பை அறுத்துக்கொண்டு விட்டனர் என்றே தெரிகிறது!''

"ஆனாலும், பார்த்தாயா அண்ணாதுரையை? தலைவருக்கு உரிய மரியாதையை அவர் தந்துதானே இருக்கிறார்?''

"சும்மா சொல்லிவிடக்கூடாது, மரியாதையை அவர் சாதாரணமாகக்கூடத் தெரிவிக்கவில்லை—உரிய மரியாதையுடன் தெரிவித்திருக்கிறார்! அதில்தான் அவருடைய உத்தமமான இதயமே தெரிகிறது!''

"நீ, எதைச் சொல்லுகிறாய்?''

"அதற்குள்ளாகவா மறந்துவிட்டாய் — அவர், சட்டமன்றக் கூட்டங்களில் பேசியதை! முன்னேற்றக் கழக அமைச்சரவை மொழித் தீர்மானம் போட்டதே — கடந்த சனவரி 23-ந்தேதி — அந்தக் கூட்டத்தில பேசுகையில் முதலமைச்சர், நமது தலைவர் காமராசரைப் பற்றியும், கேட்பவர் நெஞ்சம் கனியப் பேசினாரே!''

"சரியாகச் சொன்னாய்; இப்போது அந்த வரிகளைப் படித்தாலும், எனக்கு நமது தலைவரின்மீது பக்தி உயருவதைப் போலவே, அண்ணாதுரையின் மீதும் மரியாதை வளருகிறது; **'இந்தியாவில் உள்ள தலைமகன்களில் ஒருவர்—எளிய குடும்பத்தில் பிறந்து உயர்ந்து புகழுக்கு வந்தவர்—எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு 'தலைவர்' என்ற முறையில் நான் மதிக்கும் ஒருவர் — மொழிக் கொள்கை பற்றி அவர் கூறியதைக்கூட இந்திரா கவனிக்காதது வருந்தத்தக்கது'** என்றல்லவா ஆணி அடித்தாற்போல் பேசி, 'காமராசர் யார்' என்பதைக் காங்கிரசாருக்கே காட்டினார்!''

"சாப்பிட்டு வந்திருப்பவனைப் போய், 'சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும்' என்று ஒப்புக்கு வற்புறுத்துவதில் அழகில்லை. உண்மையில், பசித்து வந்தவனை உளமார அழைத்துப் பரிமாறுவதில்தான் விருந்தோம்பலின் பண்பே இருக்கிறது! நம்மவர்களையும் பார்—பதவியில் அவர் இருந்தவரையில், அவரது நிழலைக்கூடத் தரையில் படவிடாமல் நெருக்கமாகச் சுற்றிவந்து கொண்டிருந்தனர்! இன்று பதவி போன பின்பும் அவருக்கு உரிய அரசியல் மதிப்பு, எங்கு—எவரிடமிருந்து—எப்படிப்பட்ட பிரச்சினைக்காக வந்திருக்கிறது பார்த்தாயா?''

"நீ சொல்வது, நன்றாக 'தைக்கும்'படிதான் இருக்கிறது; ஆனால், இந்திராகாந்தி புரிந்துகொள்ள வேண்டுமே?''

"ஏன் இந்திராகாந்தி அளவுக்கு போகிறாய் — இங்கிருப்பவர்களைச் சொல்! இந்தச் சந்திப்பு என்ன — சாதாரணமானதா? நம்மவர்கள் மத்தியில் ஒரு புன்முறுவலைக்கூடக் காணோமே?''

"ஒரு வேளை, 'புதிய தலைவரை அழைத்துப் பேசவில்லையே' என்ற கோபமோ என்னவோ?''

"யாரை — சுப்பிரமணியத்தைத்தானே சொல்லுகிறாய்? நீயே குறிப்பிட்டதுபோல், புதிய தலைவர்தானே அவர்? இன்னும் சொல்லப்போனால், காமராசர், அனைத்திந்தியாவுக்கும் மிகச் சமீபகாலம் வரையில் தலைவராக இருந்தவராயிற்றே! இந்திரா இப்போது அவரைத் தூக்கியெறிந்து அலட்சியப் படுத்திவிட்டதாகக் கூறினாலும், இரண்டு தலைமையமைச்சர்களை மிக முக்கியமான நேரத்தில் தேர்ந்தெடுத்த சாமர்த்தியசாலியாயிற்றே, காமராசர்!''

"ஆமாம்; யார் அதையெல்லாம் மறக்கவோ, மறுக்கவோ

முடியும்? தமிழக முதலமைச்சர் இந்தத் தடவை, மேலவையில் பேசும்போதுகூட, 'பதவி போய்விட்டாலும், காமராசரை, 'தலைவர்' என்றுதான் எனக்கு அழைக்கவருகிறது' என்று இனிக்க இனிக்கச் சொன்னாரே—அது என்ன, பொய்யாகவா இருக்க முடியும்?''

"அது மட்டுமா? முக்கியமான பிரச்சினை வரும்போதெல்லாம், அமைதியாக இருந்தே அதற்கொரு விளக்கம் தரும் திறமையையும் காமராசரிடம்தானே காண முடிகிறது?''

"சுப்பிரமணியம், பதட்டத்தில் எதையாவது சொல்லிவிடுகிறாரே—அதைப் பற்றிக் குறிப்பிடுகிறாயா?''

"அதை மட்டுமல்ல நான் சொல்லுவது? இந்த மொழிச் சிக்கலையேதான் எடுத்துக்கொள்ளேன் — காமராசர் என்ன செய்தார்? ஊரும் உலகமும் விவாதம் நடத்திக்கொண்டிருக்கையில், அவர், வாய் திறக்கவேயில்லை! உண்மையில் அக்கறை கொண்ட சில நல்ல அரசியல்வாதிகள் கூட. 'காமராசர் ஏன் பேசாமல் இருக்கிறார்' என்று கேட்டார்கள். இங்கே உள்ள நமது தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள்கூட, வழக்கமாக, 'புதுடில்லியை ஆதரித்துத்தான் ஆகவேண்டும்' என்ற நிலையில், 'மத்திய அரசின் மொழித் தீர்மானம் மொத்தமாகச் சரியே' என்றுதான் எழுதியும், பேசியும் வந்தார்கள். அப்படிப்பட்ட நேரத்தில்தான், கடைசியாகக் காமராசர், பெங்களூரில் சுருக்கமாகப் பேசி விளக்கமான கருத்தைத் தந்தார்; 'மொழித் தீர்மானம், இந்தி பேசாத பகுதி மக்களுக்குப் பளுதான்; அப்படியே நிறைவேற்றுவதைத் தள்ளிவையுங்கள்' என்று இரண்டே வரிகள்தான் பேசினார்!''

"வரிகள்தான் இரண்டே தவிர, மொழிப் பிரச்சினை முழுவதுமே அதுதானே! அந்தக் கருத்தில்தானே இன்று கட்சி எல்லையைக் கடந்து இங்கு எல்லோருமே ஒன்றாக இருக்கின்றனர்?''

"ஆனால், நமது சுப்பிரமணியத்தின் புதிய தலைமைதான், புதிய பாதையில் போகிறது போல் இருக்கிறது!''

"இங்கே வேறு யார் இருக்கிறார்கள் — நாம் பேசுவதைக் கேட்டுவிட! சிறிது வெளிப்படையாகத்தான் சொல்லுகிறேனே — 'சலசலப்புக் காட்டுவதில்தான் சாமர்த்தியத்தைக் காட்டுகிறாரே தவிர, இப்படி அமைதியான முறையில் பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை இல்லாதவராக இருக்கிறார்' என்று பொதுவாக இருப்பவர்கள் குறைகூறும் வழிக்குத்தானே நமது சுப்பிரமணியமும் இடம் கொடுக்கிறார்?''

"நீ சொல்லுவதுபோல் சுப்பிரமணியமும், மொழிப் பிரச்சினையில், அரசியல்தானே நடத்தப் பார்க்கிறார்? காமராசரைப் போல, 'பொதுவான கருத்து' என்ற ஒரு நிலைக்கு அவர் போவதாகவே காணோமே!''

"ஒருவேளை, கட்சி வேலைகளில் முழுக் கவனம் செலுத்தி, காமராசரை மிஞ்சப் பார்க்கிறாரோ, என்னவோ?''

"அப்படியும் இருக்கும்; அதுதான், 'மொழிக்குப் பாதுகாப்பு யாராவது தேடிக்கொள்ளட்டும்' என்ற எண்ணத்தில், சனநாயகத்துக்குப் பாதுகாப்புத் தேடும்படி நமக்கெல்லாம் கட்டளையிட்டார் போலிருக்கிறது!''

"இதையெல்லாம் — நம்மைப் போல் இருக்கும் ஒரு சிலர்தான்—இப்படி யாருக்கும் கேட்காமல் பேசிக்கொள்கிறோம்; கட்சியில் இருக்கும் பெரும்பாலோர் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?''

"என்ன, புதிதாக ஏதோ சொல்லுகிறாய்? சீக்கிரம் சீக்கிரம்.''

"'காமராசருக்கென்ன? ஆளும் கட்சியாகவே எங்கும் காங்கிரசு இருந்தபோது, கட்சித் தலைவராக இரண்டு இடங்களிலும் அரசியல் நடத்திவிட்டார்; இப்போது இருப்பதோ, இங்கு ஒரு நிலை—அங்கு ஒரு நிலை; அதற்குத் தகுந்தாற்போல் கட்சியை நடத்துவது அவ்வளவு சுலபமல்ல; ஆனால், அந்த காரியத்தைத்தான சுப்பிரமணியம் பொறுப்பேற்றிருக்கிறார்' என்று அவருக்கு இருக்கும்

கஷ்டங்களைச் சொல்லிப் பரிதாபப்படுகிறார்கள்!''

"படட்டும், படட்டும்; ஆனால், கடைசியில் அவரது அரசியல் திறமையைப் பார்த்து யாரும் பரிதாபப்பட வேண்டிய நிலைமை வந்துவிடக்கூடாது; இப்போதே என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா வடக்கே?''

"ஏன், அங்கும் இங்கும் பார்க்கிறாய்? ஒருவரும் இல்லை—ஒட்டுக் கேட்டுக்கொண்டு; தைரியமாக மனதில் பட்டதைச் சொல்லேன்!''

"நான் சொல்லப் போவதை, 'மனதில் பட்டது' என்று கூறி, மாட்டிக்கொள்ளத் தயாராக இல்லை; பத்திரிகைகளில் படித்தது - படித்தவர்கள் சொல்லியதைக் கேட்டது; அங்கே உள்ள நம்மவர்களும் மற்றவர்களும். என்ன பேசிக்கொள்ளுகிறார்களாம் தெரியுமா?—மொழிப் பிரச்சினையால், 'காமராசர், இராஜாஜி, அண்ணாதுரை ஆகிய எல்லோருமே ஒன்றாக இருக்கிறார்கள்' என்று!'

"இது என்ன பெரிய செய்தி — 'காமராசர், கழகத்தில் சேர்ந்துவிட்டார்' என்றே முன்பு 'ஒரு பத்திரிகை எழுதியிருந்தது! இன்னொரு பத்திரிகை கார்ட்டூன் போட்டிருந்ததே—அதைவிடவா?''

"இப்படி, 'நம் பெயரும் அடிபட்டுவிடக் கூடாதே; அது. டில்லியில் உள்ளவர்களின் கோபத்துக்கு இடம்கொடுத்துவிடக் கூடாதே' என்றுதான் சுப்பிரமணியம், கழகத்தை எதிர்த்து எல்லா பிரச்சினைகளிலுமே முழு மூச்சாகப் பாடுபடுகிறார் போலிருக்கிறது!''

"அப்படி, 'எங்கும்—எதற்கும் எப்போதும் கழகத்தை எதிர்ப்பது' என்ற கொள்கையைக் கொண்டவரை, 'அண்ணாதுரை அழைத்துப் பேசுவார்' என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?''

"நாட்டுக்குப் புரிவதுபோல் எல்லோருக்கும் புரியவேண்டுமே?''

"அரசியலே அதுதான் அப்பனே; ஒரு பிரச்சினை ஒரே மாதிரி எல்லோருக்குமே புரிந்துவிட்டது என்றால், அப்புறம் அது அரசியலே இல்லை! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி தெரிவதுதான் அதன் இலக்கணம்! அதனால்தான், காமராசரது புதிய நிலையை புதுடில்லிவாதிகளும், பத்திரிகைகளும 'அவர், கழகத்தில் சேர்ந்துவிட்டார்' என்றும், மக்கள் சபையில் உள்ளவர்கள், 'அவர் பிரிவினையே கோருகிறார்' என்றும் பேசியிருக்கிறார்கள்!''

"நல்ல வேடிக்கைதான் போ!''

—எஸ். ஆர்.

'சட்டங்களை இந்தியில் மொழிபெயர்க்க முயற்சிப்பது நகைப்புக்குரியதாகும்'

'ஒருமைப்பாட்டை அச்சுறுத்தும் நிலை நாட்டில் உருவாகியிருக்கிறது'

புவனேசுவரம், பிப். 27—

"இந்தியத் தலைமை நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் இந்தி மொழியில் நடவடிக்கைகள் நடத்தப்படுவதற்கான தகுதியை இந்தி மொழி பெற்றிருக்கவில்லை.

"தற்போதுள்ள சட்டங்களையும் சட்ட அறிக்கைகளையும் இந்தியில் மொழிபெயர்க்க முற்படுவது நகைப்புக்குரிய செயலாகும்"

என்று ஒரிசா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி பர்மன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

'சட்ட மொழி' என்ற தலைப்பில் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் ஒருமைப்பாட்டை முழு அளவில் நினைவில் கொண்டு மொழிப் பிரச்சினையை நிதானமாக மறுபரிசிலனை செய்ய வேண்டும்; உச்சக்கட்ட நேரடி நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்.

"சட்ட மொழி பற்றிய தீவிரக் கொள்கை, நாட்டின் ஒருமைப்பாட்டை அச்சுறுத்தும் நிலையிலேயே இருக்கிறது.

"இந்தியாவின் தலைமை நீதிமன்றத் தலைமை நிதிபதியைத் தலைவராகவும், பதவியிலிருந்து ஓய்வு பெற்ற உயர் நிதிமன்ற நிதிபதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து, சட்ட மொழிப் பிரச்சினையைப் பொறுமையாகப் பரிசிலனை செய்ய வேண்டும்."

பர்மியப் பாங்கிகளில் இந்தியர்கள் பணம்

திரும்பப் பெற நடவடிக்கை

தலைமையமைச்சர் தகவல்

புதுடில்லி, பிப். 26—

"பர்மாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்துள்ள இந்தியர்கள், பர்மியப் பாங்கிகளில் தங்கள் பணம் அந்நாட்டு அரசால் முடக்கப்பட்டிப்பதை நீக்கி, பணத்தைத் திரும்பப் பெறுவதற்காகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இந்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியுள்ளனர்"

என்று தலைமையமைச்சர் இந்திரா, மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பர்மாவை விட்டுவந்த இந்தியர்களின் சொத்துக்கு நட்டாடு தருவது சம்பந்தமாக இந்திய அரசுக்கும்—பர்மிய அரசுக்கும் இடையே நடந்துவரும் பேச்சுகளில், பாங்கிகளில் உள்ள பணம் பற்றிய பேச்சும் இடம் பெறும்."

திரும்பிவரும் இலங்கைத் இந்தியர் சொத்துக்கள்

"இலங்கையிலிருந்து திரும்பிவரும் இந்தியர்கள், தங்கள் சொத்துகளைக் கொண்டுவர இந்தியா—இலங்கை ஒப்பந்தம் வகை செய்திருக்கிறது; இது, இந்தியாவுக்கு வரும் இந்தியருக்குத்தான் பொருந்தும். இது சம்பந்தமாக தற்போதுள்ள நிலைமை பற்றி அரசுக்குத் தெரிவிக்குமாறு இலங்கையிலுள்ள இந்திய அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

"இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர் பற்றியும், குடியுரிமையற்றவர்கள் பற்றிய இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தைத் திருத்துவது பற்றியும், இலங்கைத் தலைமையமைச்சரும்—இந்தியத் தலைமையமைச்சரும் கூடிப் பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கவில்லை."

தென்னகமக்கள் உணவுப்பழக்கம்-- மாற்றியமைக்க டில்லியின் திட்டம்!

அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ள மக்கள் வாழும் வட்டாரங்களில் ரொட்டித் தயாரிப்பை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மக்களின் உணவுப் பழககத்தை மாற்றுவதற்கு மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

"சத்துள்ள கோதுமை மாவுப் பண்டங்களை மக்கள் அதிக அளவில் உட்கொள்வார்களேயானல், உடல்நலம் பெறுவதுடன், அரிசி உணவை அவர்கள் பயன்படுத்தும் அளவும் குறையும்" என்று காரணம் காட்டுகிறது--மத்திய அரசு!

கூட்டுறவு முறையில் நடைபெறும் பண்டகசாலைகள் சிறிய அளவில் ரொட்டித் தயாரிக்கும் தொழிலைத் தவக்குவதற்கு நிதியுதவி செய்யவும் டெல்லி முயற்சிக்குமாம்; மாநில அரசுகளின் மூலம் இந்த நிதியுதவி வழங்கப்படுமாம்.

கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களுக்குச் சிறு நகரங்களில் இருந்து வரும் தேவையை நிறைவு செய்யும்வகையில் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், அரசாங்க நியாய விலைக் கடைகளும் ரொட்டி சுடும் தொழிலில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாம்.

சிறிய அளவில் ரொட்டித் தயாரிக்கும் தொழிலுக்கான மாதிரித் திட்டம் ஒன்றை மத்திய உணவு அமைச்சகம், மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ளது.

ரூ. 2 இலட்சம் முதலீட்டில் துவக்கப்படும் இந்தத் தொழிலில் ஆண்டொன்றுக்கு ரூ. 24,000 இலாபம் கிடைக்கும் என்று தெரிகிறது.

பர்மா அரிசி மீண்டும் இந்தியாவுக்குக் கிடைக்கும்

இரங்கூன், பிப். 27—

பற்றுக்குறை காரணமாகப் பர்மாவிலிருந்து 15 சதவிகித அரிசி ஏற்றுமதியைக் கடந்த ஆண்டு குறைத்திருந்த பர்மிய அரசு,இந்த ஆண்டு மீண்டும் இந்தியாவுக்கு அரிசி கொடுக்க முன்வந்துள்ளது.

புதிய அறுவடையிலிருந்து ஒரு இலட்சம் டன் அரிசியை இந்தியாவுக்குத் தருவதற்கு பர்மிய அரசு முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

இராமேசுவரம் --- தனுஷ்கோடி இரயில் தொடர்

கைவிடுவதென டில்லி முடிவு

புதுடில்லி, பிப். 27—

1964-ம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட புயலினல் சேதத்துக்குள்ளான தனுஷ்கோடி—இராமேசுவரம் இரயில் தொடரைக் கைவிடுவதென இரயில்வேத் துறையினர் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இப்பாதை பழுது பார்க்கப்பட்டுத் தற்போது இரயில்கள் எல்லாம் இராமேசுவரத்திற்குச் செல்லுகிறது.

"இத்தொடரை மீண்டும் புதுப்பிப்பதற்கு ஏற்படும் செலவைவிட, பாதுகாப்பதற்கு அதிகச் செலவு ஆகும்" என்று இரயில்வேத் துறையினர் கருதுகின்றனர்.

உலகப் பொருட்காட்சியில் டி. வி. எஸ். அரங்கம்

அமைச்சர் மு. கருணாநிதி பார்வையிட்டார்

சென்னை, பிப். 23—

சென்னை உலகப் பொருட்காட்சியில் அமைந்துள்ள டி. வி. எஸ். நிறுவனத் தொழிற்கூடங்களின் காட்சி அரங்கை, 15-2-68 அன்று தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் பார்வையிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் 'முரசொலி' மாறனும் உடன் வந்திருந்தார்.

சுந்தரம் மோட்டார் நிறுவனத்தின் பொது விற்பனை நிர்வாகி திரு. டி. கே. சேஷத்திரி வரவேற்று, சுற்றிக் காண்பித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள். அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனுல் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை யெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப்பொருட்களுக்கு தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களைவிஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியர் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானுல் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

IWTMB 4109

பம்பாயில் அமைச்சர் சத்தியவாணிமுத்து--- பல்வேறு வரவேற்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

காங்கிரசு ஏட்டின் பொய்ச் செய்திக்குக் கழகச் செயலாளர் மறுப்பு

பம்பாய்—தாராவி தி.மு.க. செயலாளர் த. மு. பொற்கோ அறிவிப்பதாவது:—

"பம்பாயில் தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கு நடைபெற்ற மகத்தான ஊர்வலத்தையும், சிறப்பான வரவேற்புப் பொதுக்கூட்டத்தையும் களங்கப்படுத்தும் வகையில் தேசிய இதழ்களெனும் போர்வையில் வெளிவரும் தரங்கெட்ட ஏடுகள் சில வெளியிட்டுள்ள கலப்படமற்ற பொய்ச் செய்தியைக் கண்டு பெரிதும் வருந்துவதுடன், அரசியல் அநாகரிகச் செயலை மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பிப். 17-ம் நாள், குர்லா கழக வரவேற்பிலும், 18-ம் நாள் காலை நடைபெற்ற காலக்கில்லா நாவலர் மன்றம், இரசபலிசால் சௌந்தரபாண்டியனார் மன்றம், கும்பர்வாடா கே.வி.கே. சாமி மன்றம், இலக்குமிசால் எம்.ஜி.ஆர். மன்றம், காந்திசால் மனோகரன் மன்றம், காந்திசால் சமிட்டி, ஆகாசவாடி சத்தியவாணிமுத்து மன்றம், அபுபக்கர்சால் அண்ணா படிப்பகம், கல்யாணிவாடி காட்டூர் ஆ. தி. மகாசன சங்கம், து. ம. பீர். இல்லம், கழகப் பணிமனையான 'திராவிடரக'த்தில் அண்ணா படத்தைத் திறந்துவைத்துப் பேசிய கூட்டம் உட்பட அத்தனை நிகழ்ச்சிகளிலும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது.

சிறப்பாக நடந்தேறிய நிகழ்ச்சிகளையெல்லாம் தோற்கடிக்கும் விதத்தில் அன்று மாலை மகத்தான ஊர்வலமும், திடல்கொள்ளா அளவிற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி இறுதிவரை எந்தவிதமான சலசலப்புமின்றி அமைதியாக இருந்து நடந்தேறிய கூட்டத்தையும் களங்கப்படுத்தும் வகையில், பொய்ச் செய்தியை வெளியிடுவதன் மூலம் கழக வளர்ச்சியைத் தடுத்திடலாமெனக் கனவு காணும் கயமைக் குணம்படைத்தோர் வெளியிட்டுள்ள செய்தி கலப்படமற்ற பொய்ச் செய்தி என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இத்தகைய இழிமதியாளர் நடத்தும் ஏடுகளைப் புறக்கணிக்குமாறும் வேண்டுகிறேன்.

அம்மையார் அவர்கள் கழக அழைப்பின்பேரில்தான் பம்பாய் வந்தார்களே தவிர, சொந்த வேலையாக அல்ல; மாப்பிள்ளை இரவணதாஸ் ஜபல்பூரிலிருக்கிறாரே தவிர, வெளியிட்டுள்ள செய்திப்படி பம்பாயில் அல்ல.

தம்மை இழித்துரைத்தவர்கட்கு கண்ணியமான பதிலைத் தந்து அமைச்சரவர்கள், அரசியல் நெறிகெடாவகையில்—பலரும் பாராட்டும் வகையில் பேசினார்களேதவிர, செய்தி வெளியிடப்பட்டிருப்பதைப் போல் அல்ல.

கறுப்புக் கொடி—கல்லெறி—போலீசார் தலையிடு என்பதெல்லாம், வரிந்துகட்டிக் கூறப்பட்ட கயமைமிக்க பொய்ச் செய்தி; மாப்பிள்ளையும் திட்டிப்பேசினார் என்பது அதனினும் பெரிய பொய்ச் செய்தி."

வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையில் குறைத்தபட்சக் கூலி நிர்ணயம்

புதுடில்லி, ஏப். 27—

"வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் அடிப்படையில் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயம் செய்வது பற்றி மத்திய கூலி உயர்வும் ஆலோசனைக் குழு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது"

என, மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஹாத்தி, மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்,

இரயில்வேயில் லைசென்சு பெற்றுப்பணிபுரியும் 'போர்ட்டர்'களின் வேலைவாய்ப்பு, வாழ்க்கை நிலை ஆகியவைபற்றி ஆராய நியமிக்கப்பட்டிருக்கும் இக்குழு தன்னுடைய அறிக்கையை இந்த ஆண்டு இறுதியில் தரும்" என்று இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

சென்னை தீ விபத்துத் துயர்துடைப்புச் சீரமைப்பு நிதி

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு பிப். 19-ல் வந்த தொகை ரூ. 2,00,155 ஆகும்.

இத்துடன் மொத்தம் ரூ 35,96,201 சேர்ந்துள்துள்ளது.

பிப். 18-ம் நாள் நன்கொடைகள் விவரம் வருமாறு:—தமிழக அரசு ரூ. 2,00,000! செயலாளர், தமிழ் மன்றம், உடுப்பி--தென் கன்னடம் ரூ. 155.

செட்டிபாளையம் பேரூராட்சி மன்றம்

தி. மு. கழகத் தோழர் தலைவராகத் தேர்வு

12—2—68 அன்று வட்டார வளர்ச்சி அதிகாரி ஆணையாளராக இருந்து, போத்தனூர்-செட்டிபாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர் தேர்தலை நடத்தினார்.

செட்டிபாளையம் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவில் 14 உறுப்பினர்களைக்கொண்ட ஊராட்சிமன்றத்தில் கழக உறுப்பினர் இருவராலும், பி.சோ. உறுப்பினர் ஒருவர் ஆதரவாலும், காங்கிரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்ட எம். சின்னையன் தோற்கடிக்கப்பட்டு, கழக வேட்பாளர் சி. ஆர். மருதமுத்து தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெற்றி பெற்ற சி. ஆர். மருதமுத்துவுக்கு கோவை நகரச் செயலாளர் ப. கோபால், பி. எஸ். சானகிராமன், கண்ணமாறன் ஆகியோர் மாலை அணிவித்துப் பாராட்டிப் பேசினர்.

செட்டிபாளையம் பேரூராட்சி மக்கள், 25 ஆண்டுக்காலம் பேரூராட்சி மன்றத்தில் இருந்துவந்த காங்கிரசு ஆட்சி ஒழிக்கப்பட்டுக் கழகத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும், பாராட்டியும் மகிழ்ச்சியடைந்தனர்.

தமிழக அரசுக்கு மாணவர்கள் நன்றி

சென்னையில் விழா நடத்த முடிவு

கடந்த சனவரித் திங்கள் 23-ம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தையும், பிற தமிழ் வளர்ச்சிக்கான செயல் திட்டங்களையும் பாராட்டி சென்னைக் கல்லூரிகள் தமிழ் மன்றம் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் பாராட்டுக் கூட்டம் மார்ச் திங்களில் நடைபெறும்.

பாலர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவில், பேரறிஞர் அண்ணா அவர்கட்கு வெள்ளியாலான சென்னைப் பல்கலைக்கழக உருவம் அமைந்த பரிசொன்று பேழையில் வைத்து அளிக்கப்படும்.

இவ்விழாவில் தமிழக அமைச்சர்களும், மாணவர்களும், பேராசிரியர்களும், எம். ஜி. ஆர். அவர்களும் பங்கேற்பர்.

"விழாவிற்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன" என்று மேற்படி மன்றத் தலைவர் செல்லம்பாயிரம் அறிவிக்கிறார்.

வெளியூர் செல்லும் பேருந்துக் கட்டணம்

தனியார்--பொதுத் துறைகளில் ஒரே சீராக இருக்கும்

அமைச்சர் கருணாநிதி தகவல்

மதுரை, பிப். 28—

"ஏப்ரல் முதல் நாள் தொட்டுத் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் பேருந்துக் கட்டணங்கள் ஒரே மாதிரியாக இருக்கும்" என்று, இங்கு செய்தியாளர்களிடம் அமைச்சர் மு. கருணாநிதி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

"இதற்கான ஒப்பந்தம் மாநில அரசுக்கும்—தனியார் துறையினருக்குமிடையே கையெழுத்தாகிவிட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஏப்ரல் முதல் நாள்தொட்டு இரு துறையிலும் கிலோ மீட்டருக்கு இரண்டரை காசு வசூலிக்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தின்படி தனியார் துறையினர் தம் கட்டணத்தைக் கிலோ மீட்டருக்கு மூன்று காசுகளிலிருந்து இரண்டரைக் காசாக குறைப்பர்.

பொதுப் பணித் துறைச் சிரமைப்புத் திட்டம்

ஏப்ரல் முதல் அமுலாகும்

"தமிழகப் பொதுப் பணித் துறைச் சீரமைப்பு வரும் ஏப்ரல் முதல் நாள் முதல் அமுலாகும்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

"இச்சீரமைப்பால் பொதுப் பணித் துறையில் ஆட்குறைப்பு ஏற்படாது; மாறாக, பதவி உயர்வு, மற்றும் வேலை வாய்ப்புப் பெருகும்.

வைகையை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு மூன்றரைக் கோடி ரூபாய் செலவாகும். இப்பணி, 1968-69-ல் தொடங்கும்.

அறிஞர் அண்ணா வீடு திரும்பினார்

சென்னை, பிப். 26—

வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று இல்லம் திரும்பினார்கள்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சனவரித் திங்களில் தமிழகத்தில் கீழ்க்கண்ட இடங்களில் குறைந்த வருமானக்காரர்களின் வாழ்க்கை செலவுப் புள்ளிவிவரம் வருமாறு:-

கடலூர் 764 : திருச்சிராப்பள்ளி 688 ; மதுரை 663 ; கோயம்புத்தூர் 762 : நாகர்கோவில் 769.

மொழிச் சுமை--காங்கிரசுக் கட்சி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தலைவர்களுடனும் இதுபற்றிப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

"இந்தி பேசாத பகுதிகளில் இப்போது இருந்து வரும் கொந்தளிப்புகளுக்கோ நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ள ஆட்சிமொழி பற்றிய தீர்மானம்தான் காரணம்! இந்தி பேசாதவர்களுக்குத் தீங்கு தருவதாகச் சொல்லப்படும் அதனை அமுலாக்குவதை நிறுத்திவையுங்கள்"

என, தென்னகக் காங்கிரசுக்காரர்கள் செயற்குழுக் கூட்டத்தில் குரல் எழுப்பியதாகவும், ஆனால் அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவே இல்லையென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

எனவே, மொழிச் சுமையை அகற்ற வேண்டுமென்பதில் அக்கறை இருப்பதற்குப் பதிலாக, உண்மையில், 'இந்தியை மேலும் கட்டாயமாக்குவது எப்படி' என்பதிலேயே, 'காங்கிரசு மேலிடத்தவர்களின் அக்கறை இருந்திருக்கிறது' என்று எண்ணுவதற்கு இடமளிக்கிறது!

கல்வித் துறையிலேயே தென்னக மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தினை அமுல் நடத்தி வந்தபோது, வடக்கத்திய இந்தி மாநிலங்கள்தான் அத்திட்டத்தினை முதலில் அசட்டை செய்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காங்கிரசுச் செயற்குழுவின் விவாதங்களில், காமராசரின் சில கருத்துக்கள் அனைவரது கவனத்தையும் கவருவனவாக இருந்திருக்கின்றன.

"காங்கிரசுச் செயற்குழு செய்யும் முடிவுக்கு, இராஜாஜி—அண்ணாதுரை ஆகியோரது ஒப்புதலைப் பெற்றுத் தரமுடியுமா?" எனக் கோரிய சில வடக்கத்தியத் தலைவர்களிடம், காமராசர், 'முதலில் நமது கட்சியின் கொள்கை என்ன என்பதைத் தீர்மானிப்போம்; பின்னர், மற்றவர்களின் ஒப்புதலைப் பற்றி பேசுவோம்' என்று பதில் கூறியிருப்பதாகத் தெரிகிறது!

கல்வித் துறையில் தமிழக அரசு மும்மொழித் திட்டத்தினைக் கைவிட்டிருப்பதும், இதனைத் தொடர்ந்து, மற்றுமுள்ள இந்தி பேசாத மாநிலங்களும் இத்திட்டத்தினைக் கைவிட முடிவு செய்திருப்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

தமிழக மின்கழகம்

தொழில் நுணுக்க உறுப்பினர் நியமனம்

சென்னை, பிப். 26—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தொழில் நுணுக்கத் துறை உதவிப் பொது நிர்வாகியாக இருந்துவரும் திரு. ஆர். ஆர். பிள்ளை, தமிழக மின்சழகத்தின் முழுநேர தொழில் நுணுக்க உறுப்பினராக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர் விரைவிலேயே இப்பதவியை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியத் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி பதவியேற்பு

இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு. இதயதுல்லா பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்ச்சியை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் நடத்திவைத்தார்.

தலைமை நீதிபதியாகப் பதவியேற்றிருக்கும் திரு. இதயதுல்லா, 1958-ம் ஆண்டு முதல் இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றியிருக்கிறார்.

1970-ம் ஆண்டு டிசம்பர் 16-ந் தேதி வரை அவர் இப்பதவியை வகிப்பார் என்றும் தெரிகிறது.

இந்தியத் தலைநகரில் இந்த நிலை!

புதுடில்லி, பிப். 26—

தலைநகரில் 30,000 பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருவதன் விளைவாகப் பள்ளிக்கூடங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன!

சுமார் எட்டு இலட்சம் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லவேண்டிய அவசியமின்றி தெருக்களில் அலைந்துவருகின்றனர்!

ஆசிரியர்களுக்குப் பதிலாகச் சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் பாடம் கற்பிக்கப் பல பெற்றோர்கள் முன்வந்துள்ளனர்.

ஆண்டுத் தேர்வுக்கு இன்னும் ஒரு மாத காலமே இருக்கிறது; இந்நிலையில், ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் நீடித்துவருவது குறித்து பெற்றோர்களிடையே பெரிதும் கவலை இருந்துவருகிறது.

'ஆசிரியர் வேலைநிறுத்தம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்தனர்; ஆனால், அவைத் தலைவர், ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

வறண்ட பகுதிகளை வளமுள்ளவைகளாக மாற்றியமைக்கப் புதிய திட்டங்கள்

முகவை மாவட்ட நீர்ப்பாசன மாநாட்டில் ஆய்வு நடைபெறும் -- அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்பர்

சென்னை, பிப். 26—

"இராமநாதபுரம் மாவட்ட நீர்ப்பாசன மாநாடு, ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் பரமக்குடியில் நடைபெறும்"

என்று இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, செய்தியாளரிடம் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்த மாநாட்டில், தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி, சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், மாவட்டக் கலெக்டர், வருவாய்த்துறை அதிகாரி, நாடாளுமன்ற—சட்டமன்ற—மேலவை உறுப்பினர்கள் கலந்துகொள்கிறார்கள்.

"பாசன வசதி இல்லாத பகுதிகளுக்குத் தண்ணீர் வசதி கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கு இராமநாதபுரம் பகுதியில் வத்திராயிருப்பு அருகில் ஓர் அணையைக் கட்டுவது பற்றியும் இந்த மாநாட்டில் விவாதித்து இறுதி முடிவெடுக்கப்படும்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதிப் பாசனத் திட்டங்கள் பற்றிப் பரிசிலனை செய்யப்படும்.

வறண்ட பகுதிகளை வளமுள்ளவைகளாக மாற்றி அமைக்கின்ற புதிய திட்டங்கள் பற்றி இந்த மாநாடு ஆய்வு நடத்தும்."

சென்னை மேலவை தேர்தல் நாட்கள்

புதுடில்லி, பிப். 27—

தமிழகச் சட்டமன்ற மேலவையில் கலியாகும் 11 இடங்களுக்கு நடைபெறவேண்டிய தேர்தலுக்கான நாட்களை, தேர்தல் குழு முடிவு செய்திருக்கிறது.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் மார்ச் 15.

வேட்பு மனுக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் நாள் மார்ச் 16.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் இறுதி நாள் மார்ச் 18.

தேவைப்படுமானால் இந்த இடங்களுக்கான தேர்தல் ஏப்ரல் 8-ம் நாள் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.